Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmail.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | திங்கள், பிப்ரவரி 10, 2025 | இதழ் 303

# எடப்பாடி தலைமையில் மீண்டும் அண்ணா தி.மு.க. ஆட்சி அமைய அயராது பாடுபடுவோம்



சென்னை, 10 பிப்ரவரி 2025: எடப்பாடி பழனிசாமி தலைமையில் மீண்டும் அண்ணா தி.மு.க. ஆட்சி அமைய அயராது பாடுபடுவோம் என அண்ணா தி.மு.க. வழக்கறிஞர் பிரிவு சூளுரைத்துள்ளது.

ஜெயலலிதாவின் 77வது பிறந்த நாளை சிறப்பாகக் கொண்டாடுவது சம்பந்தமாக, அண்ணா தி.மு.க. வழக்கறிஞர் பிரிவு மாநில நிர்வாகிகள், மாவட்டச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் சென்னையில் நடைபெற்றது. வழக்கறிஞர் பிரிவுத் தலைவர் வி.எஸ்.சேதுராமன் தலைமை வகித்தார். வழக்கறிஞர் பிரிவுச் செயலாளர் ஐ.எஸ். இன்பதுரை முன்னிலை வகித்தார். வழக்கறிஞர் பிரிவு இணைச் செயலாளர் இ.பாலமுருகன் வரவேற்று பேசினார்.

முன்னாள் அமைச்சர்கள் சி.பொன்னையன், டி.ஜெயக்குமார், பா.வளர்மதி,

எஸ்.கோகுல இந்திரா, ஆர்.பி. உதயகுமார், முன்னாள் வாரியத் தலைவர் ஆதிராஜாராம் ஆகியோர் பேசினார்கள். வழக்கறிஞர் பிரிவு துணைச் செயலாளர் எம். சந்திரசேகர் நன்றி கூறினார். ஜெயலலிதாவின் 77வது பிறந்த தினத்தை, இந்த நாடே திரும்பிப் பார்க்கும் வகையில் மிகவும் எழுச்சியுடனும், சீரும் சிறப்புமாகவும் கொண்டாடுவது என்று தீர்மானிக்கிறது.

வழக்கறிஞர்களை வாட்டி வதைக்கும் வகையில், சேமநல நிதி முத்திரைத் தாள் கட்டணத்தை 3 மடங்காக உயர்த்தி, விடியா திமுக அரசு அறிவித்துள்ளதை கழக வழக்கறிஞர் பிரிவு வன்மையாகக் கண்டிக்கிறது.

தங்களை விமர்சிப்பவர்களையும், அரசின் செயல்பாடுகள் குறித்து மாற்றுக் கருத்துகள் சொல்பவர்களையும் பொய் வழக்கு போட்டு சிறையில் அடைப்பதை வாடிக்கையாகக் கொண்டுள்ள ஸ்டாலின் மாடல் அரசின் ஹிட்லர் தனத்தை கழக வழக்கறிஞர் பிரிவு வன்மையாகக் கண்டிக்கிறது. இந்தக் கொடிய அரசின் கொடூர நடவடிக்கைகளில் இருந்து பாதிக்கப் படுபவர்களுக்கு சட்ட ரீதியான நிவாரணம் பெற்றுத் தர கழக வழக்கறிஞர் பிரிவு என்றென்றும் துணை நிற்பது என உறுதியேற்கிறது.

பாலியல் அரக்கர்களின் கொடூர கரங்களை அடக்க இயலாத, திறனற்ற விடியா தி.மு.க. அரசின் துருபிடித்த இரும்புக் கரத்தை, கழக வழக்கறிஞர் பிரிவு கண்டிப்பதுடன், குற்றவாளிகளைக் காப்பாற்றும் நோக்கில், பாதிக்கப்பட்டவர்களின் அடையாளங்களை பொதுவெளியில் கசியவிடும் ஸ்டாலின் மாடல் அரசின் இழிசெயலுக்கு எதிராக, கழக வழக்கறிஞர் பிரிவு தமது கடும் கண்டனங்களைப் பதிவு செய்கிறது. சீருடைப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நடைபெற்ற காவலர் தேர்வில், இடஒதுக்கீடு முறைப்படி பின்பற்றப்படவில்லை என, சென்னை உயர்நீதிமன்றம் ஸ்டாலின் அரசை ஓங்கிக் குட்டியுள்ளது. ஆனாலும், மீண்டும் திருத்தப் பட்டியலில் கூட இடஒதுக்கீடு முறையை சரிவர கடைபிடிக்காமல், மீண்டும் உயர்நீதிமன்றத்தின் கடும் கண்டனத்தை விடியா தி.மு.க. அரசு பெற்றுள்ளது. இதுதொடர்பாக, சீருடைப் பணியாளர் தேர்வாணையக் கூடுதல் காவல் துறை இயக்குநர் அலுவலகத்தில் நடந்த தீ விபத்தும், அதைத் தொடர்ந்து, காவல் துறை கூடுதல் இயக்குநர், தம்மைக் கொலை செய்ய முயற்சி நடப்பதாக, காவல் துறை இயக்குநருக்கு புகாரையும் அளித்துள்ளார். இந்தக் குற்றச்சாட்டுகளுக்கெல்லாம் தார்மீகப் பொறுப்பேற்று, இடஒதுக்கீட்டு விரோத ஸ்டாலின் அரசு உடனடியாகப் பதவி விலக வேண்டும் என்று கழக வழக்கறிஞர் பிரிவு வலியுறுத்துகிறது.

சட்டசபையில் எதிர்க்கட்சித் தலைவரின் அனல் பறக்கும் பேச்சை உள்நோக்கத்தோடு மறைத்து, சட்ட விதிமுறைகளுக்குப் புறம்பாக நேரலையைத் துண்டிக்கும் தமிழக அரசின் துஷ்ட நடவடிக்கையை, கழக வழக்கறிஞர் பிரிவு வன்மையாகக் கண்டிக்கிறது.

நாட்டு மக்களை அச்சுறுத்தும் வகையில், நாள்தோறும் பெருகி வரும் ரவுடியிசம், நிர்வாகச் சீர்கேடு, போதைப் பொருள் கலாச்சாரம், பாலியல் வன்கொடுமைகள், ஊற்றெடுக்கும் ஊழல்களுக்குக் காரணமானவர்களை கட்டிக் காத்து, தட்டிக் கொடுத்து ராஜாங்கம் நடத்தும் ஸ்டாலின் அரசை அகற்றி, அன்றாடம் தனது அறிக்கைகள், போராட்டங்கள், சட்டமன்ற விவாதங்கள் மூலம் தமிழக அரசின் சீர்கெட்ட நிர்வாகத்தை சுட்டிக் காட்டி தட்டிக் கேட்கும் எடப்பாடி பழனிசாமி தலைமையில், அம்மா அரசை மீண்டும் அமைத்திட அயராது பாடுபடுவது என கழக வழக்கறிஞர் பிரிவு உத்வேகத்துடன் உறுதி ஏற்கிறது ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# டெல்லிக்கு விடுதலை கிடைத்துள்ளது ஆம் ஆத்மி கட்சியினரின் ஊழல் குறித்து விசாரணை: கொள்ளையடித்தவர்கள் திருப்பித்தர வேண்டும் - பிரதமர் மோடி திட்டவட்டம்

சென்னை, 10 பிப்ரவரி 2025: ஆம் ஆத்மியிடம் இருந்து டெல்லிக்கு விடுதலை கிடைத்துள்ளது. டெல்லியில் ஆம் ஆத்மியினரின் ஊழல் குறித்து விசாரணை நடத்தப்படும் என பிரதமர் மோடி உறுதிபட தெரிவித்தார்.

டெல்லி சட்டசபை தேர்தல் முடிவுகள் நேற்று வெளியானது. இதில் பா.ஜ.க. கட்சி அபார வெற்றி பெற்று, 27 ஆண்டுகளுக்குப்பின் தலைநகரில் ஆட்சியை பிடித்து உள்ளது.

தேர்தல் முடிவு வெளியானதை தொடர்ந்து மாலையில் கட்சியின் தலைமை அலுவலகத்துக்கு பிரதமர் மோடி வந்தார். அங்கு கட்சியின் மூத்த தலைவர்கள் மற்றும் ஏராளமான தொண்டர்கள் திரண்டு வந்து, பிரதமரை மலர் தூவி வரவேற்றனர்.

'மோடி, மோடி' என கோஷமிட்டு உற்சாகமடைந்த அவர்கள் டெல்லியில் சாதனை வெற்றி பெற்றதற்காக அவருக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

அவர்கள் மத்தியில் உரையாற்றிய பிரதமர் மோடி, ஆம் ஆத்மி அரசை கடுமையாக தாக்கி பேசினார்.

அவர் பேசியதாவது:

டெல்லியில் ஆம் ஆத்மி அரசை அகற்றியதன் மூலம் மக்கள் தற்போது நிம்மதி அடைந்து இருக்கிறார்கள். ஊழலுக்கு எதிரான இயக்கத்தில் இருந்து பிறந்த அந்த கட்சியே ஊழலில் ஈடுபட்டு உள்ளது.

ஊழலுக்கு எதிராக சிறைக்கு சென்ற முதலமைச்சர், துணை முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களை கொண்ட கட்சியாக மாறிவிட்டது.

நேர்மைக்காக தங்களுக்கு தாங்களே சான்றிதழ் அளித்துக்கொண்டவர்கள் ஊழல்வாதிகளாக மாறி விட்டனர். இது டெல்லிக்கு இழைக்கப்பட்ட மாபெரும் துரோகம் ஆகும்.

மதுபான கொள்கை ஊழல் டெல்லியை அவமதித்து விட்டது. பள்ளிகள், ஆஸ்பத்திரிகளில் நடந்த மோசடிகள் ஏழையிலும் ஏழ்மை யானவர்களை மிகவும் பாதித்தன.

உலகம் முழுவதும் கொரோனாவுக்கு எதிராக போராடியபோது இவர்கள் ஆடம்பர மாளிகையை கட்டிக்கொண்டு இருந்தனர். அந்த அளவுக்கு அவர்களின் ஆணவம் அதிகமாக இருந்தது.

டெல்லியில் ஆம் ஆத்மி அரசு வெளியிடாத தலைமை கணக்கு தணிக்கை அதிகாரியின் அறிக்கை புதிய அரசின் முதல் கூட்டத்தொடரிலேயே வெளியிடப்படும். அதன்படி ஆம் ஆத்மியினர் செய்த ஊழல் குறித்து விசாரணை நடத்தப்படும். கொளையடித்தவர்கள் அதை திருப்பித்தந்தே ஆக வேண்டும். இவ்வாறு பிரதமர் மோடி கூறினார்.

# மகா கும்பமேளா 2025: பிரயாக்ராஜில் பக்தர்களுக்கு மலிவு விலையில் தரமான உணவு தானியங்கள் வழங்க சிறப்புத் திட்டம்

சென்னை, 10 பிப்ரவரி 2025: பிரயாக்ராஜில் நடைபெறும் மகா கும்பமேளா 2025-ன் போது பக்தர்களுக்கு மலிவு விலையில் தரமான உணவு தானியங்கள் (ரேஷன் பொருட்கள்) வழங்குவது மத்திய அரசின் சிறப்புத் திட்டமாகும். நேஃபெட் எனப்படும் தேசிய வேளாண்மை கூட்டுறவு சந்தைப்படுத்தல் கூட்டமைப்பின் சார்பில் கோதுமை மாவு, பருப்பு வகைகள், அரிசி, பிற அத்தியாவசிய பொருட்கள் மானிய விலையில் விநியோகிக்கப்படுகிறது. பக்தர்கள் வாட்ஸ்அப் அல்லது போன் அழைப்பு மூலமாக ரேஷன் பொருட்களை வாங்க ஆர்டர் செய்யலாம். 1000 மெட்ரிக் டன்னுக்கும் அதிகமான ரேஷன் பொருட்கள் ஏற்கெனவே விநியோகிக்கப்பட்டுள்ளன. மேலும் 20 வேன்கள் மூலம் மகாகும்பமேளா நகரத்திலும் பிரயாக்ராஜ் முழுவதிலும் விநியோகம் நடந்து வருகிறது.

ஆசிரமங்களுக்கும், பக்தர்களுக்கும் மலிவு விலையில் ரேஷன் பொருட்களை நடமாடும் வேன்கள் விநியோகிக்கின்றன. மகா கும்பமேளாவில் துறவிகள், கல்பவாசிகள், பக்தர்கள் உணவு பற்றாக்குறையை எதிர்கொள்ளக்கூடாது என்பதற்காக, நடமாடும் வேன்கள் மூலம் ரேஷன் பொருட்கள் விநியோகம் செய்யப்படுகிறது. எந்தவொரு பக்தரும் உணவு தொடர்பான எந்தவொரு பிரச்சினையையும் எதிர்கொள்ளாமல் இருப்பதை உறுதி செய்வதற்காக இந்த சிறப்புத் திட்டம் கூட்டுறவு அமைச்சகத்தால் நடத்தப்படுகிறது என்று நேஃபெட்-டின் மாநிலத் தலைவர் ரோஹித் ஜெயின் தெரிவித்தார். ஒவ்வொரு நபரும் தங்களுக்கான உணவுப் பொருட்களை சரியான நேரத்தில் பெறுவதை உறுதி செய்வதற்காக நேஃபெட்-டின் மேலாண்மை இயக்குநர் திரு தீபக் அகர்வால் மேற்பார்வையிடுகிறார்.

மகா கும்பமேளாவில் கலந்து கொள்ளும் பக்தர்கள் 72757 81810 என்ற எண்ணில் அழைப்புகள் அல்லது வாட்ஸ்அப் மூலம் ரேஷன் பொருட்களுக்கான ஆர்டர்களை வழங்கலாம். மானிய விலையில் ரேஷன் பொருட்களில் கோதுமை மாவு, அரிசி 10 கிலோ பாக்கெட்டுகளிலும், பாசிப்பருப்பு, மசூர், கடலை பருப்பு ஆகியவை 1 கிலோ பாக்கெட்டுகளிலும் விநியோகிக்கப்படுகின்றன. ஆணைகள் பெறப்பட்டவுடன் நடமாடும் ஊர்திகள் மூலம் ரேஷன் பொருட்கள் சம்பந்தப்பட்ட ஆசிரமங்களுக்கும் துறவிகளுக்கும் உடனடியாக வழங்கப்படுகின்றன.

இதுவரை, 700 மெட்ரிக் டன் கோதுமை மாவு, 350 மெட்ரிக் டன் பருப்பு வகைகள் 10 மெட்ரிக் டன் அரிசி விநியோகிக்கப்பட்டுள்ளது. நேஃபெட்டின் தயாரிப்புகளும் 'பாரத் பிராண்ட்' தானியங்களும் பக்தர்களிடையே விரைவாக பிரபலமடைந்து வருகின்றன.

இந்தத் திட்டத்தின் மூலம், மகா கும்பமேளாவில் கலந்து கொள்ளும் கோடிக்கணக்கான பக்தர்களுக்கு உயர்தர ரேஷன் பொருட்களை அரசு வழங்குவது மட்டுமல்லாமல், இந்த செயல்முறையை வசதியாகவும் எளிதாகவும் அமைந்துள்ளது. மகா கும்பமேளா 2025, ஒவ்வொரு பக்தருக்கும் ஒரு மறக்கமுடியாத சிறப்பான அனுபவமாக இருப்பதை உறுதி செய்கிறது.

# மகேந்திரகிரியில் கிரையோஜெனிக் எந்திரம் சோதனை வெற்றி

## 'விண்வெளியில் 2 செயற்கைக்கோள்கள் இணைக்கப் பட்ட 'ஸ்பேடெக்ஸ்' பணியில் எந்த கோளாறும் இல்லை' என்று இஸ்ரோ தலைவர் நாராயணன் கூறினார்.

சென்னை, 10 பிப்ரவரி 2025:இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) 'ஸ்பேடெக்ஸ்' என்ற திட்டம் மூலம், தலா 220 கிலோ எடை கொண்ட 'சேசர்' (எஸ்.டி.எக்ஸ்-01) 'டார்கெட்' (எஸ்.டி.எக்ஸ்-02) என பெயரிடப்பட்ட 2 செயற்கைக்கோள்களை பி.எஸ்.எல்.வி. சி-60 ராக்கெட் மூலம் கடந்த டிசம்பர் மாதம் 30-ந் தேதி விஞ்ஞானிகள் பூமியில் இருந்து 470 கிலோ மீட்டர் உயரத்தில் உள்ள வெவ்வேறு சுற்றுப்பாதைக்கு வெற்றிகரமாக செலுத்தினர்.

இந்த செயற்கைகோள்கள் ஒரே உயரத்தில் இருந்த போதிலும் 50 கிலோ மீட்டர் தூரத்தில் சுற்றி வந்தது. இதனை இஸ்ரோ விஞ்ஞானிகள் கட்டுப்பாட்டு அறையில் இருந்து செயற்கைக்கோள்களின் தூரத்தை படிப்படியாக 10 கிலோ மீட்டர் குறைத்து கொண்டு வந்து, கடுமையான பரிசோதனைக்கு பின்னர், ஒரு வழியாக கடந்த மாதம் (ஜனவரி) 16-ந்தேதி விண்வெளியில் 2 செயற்கைக்கோள்களையும் ஒன்றாக (டாக்கிங்) இணைத்தனர். தொடர்ந்து செயற்கைக்கோள்களின் உயரத்தை அதிகரிக்க முயன்றபோது தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டிருப்பதாக கூறப்பட்டது.

இதுகுறித்து இஸ்ரோ தலைவர் வி.நாராயணன் கூறியதாவது:- 'ஸ்பேடெக்ஸ் திட்டத்தின் நோக்கம் விண்கலம் அல்லது செயற்கைக்கோள் இணைப்பு ('டாக்') மற்றும் துண்டிப்பது ('அன்டாக்') செய்வதற்கு தேவையான தொழில்நுட்பத்தை உருவாக்கி அதை செயல்படுத்துவதாகும். 'ஸ்பேடெக்ஸ்' பணியில் கோளாறுகள் எதுவும் ஏற்படவில்லை. 2 செயற்கைக்கோள்களும் இணைக்கப் பட்டு (டாக்) உள்ளது.

இதேபோன்று அவற்றை கட்டுப்படுத்தும் பணியும் வெற்றி பெற்றுள்ளது. வரவிருக்கிற நாட்களில், செயற்கைக்கோள்களை பிரிக்கும் பணி, மின்சார பரிமாற்ற சோதனைகளும் மேற்கொள்ளப்படும்.

தமிழகத்தில் நெல்லை மாவட்டத்தில் உள்ள மகேந்திரகிரியில், ராக்கெட்டில் பயன்படுத்தப்படும் உள்நாட்டு சிஇ-20 கிரையோஜெனிக் எந்திரத்தின் முக்கியமான வெற்றிட பற்றவைப்பு சோதனை வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

விண்வெளி பயணங்களின்போது பல கிரையோஜெனிக் என்ஜின் ஈறு தொடக்கங்களைச் செய்வதற்கான இஸ்ரோவின் பெரிய முயற்சியின் ஒரு பகுதியாக இந்த சாதனை உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.



தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி
திங்கள்,
பிப்ரவரி 10, 2025

# சென்னை காமிக் கான் 2025 இல் யமஹா ஒரு அதிரடி காட்சியை வழங்குகிறது

சென்னை, 10 பிப்ரவரி 2025: சென்னை காமிக் கான் 2025 இல் யமஹா பாணி, செயல்திறன் மற்றும் உற்சாகத்தை பாப் கலாச்சாரத்துடன் கலக்கிறது




இந்தியா யமஹா மோட்டார் பிரைவேட். பிப்ரவரி 8-9, 2025 அன்று சென்னை நந்தன்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற இந்தியாவின் மிகப்பெரிய பாப் கலாச்சார நிகழ்வான காமிக் கானில் லிமிடெட் முக்கிய இடத்தைப் பிடித்தது. அதன் செழுமையான கலாச்சார பாரம்பரியம், மாறும் வாகனத் தொழில் மற்றும் ஆர்வமுள்ள ரசிகர் சமூகம் ஆகியவற்றுடன், கலை, வாழ்க்கை முறை மற்றும் புதுமை ஆகியவை கண்கவர் கொண்டாட்டத்தில் ஒன்றிணைந்த ஒரு மின்மயமாக்கல் நிகழ்வுக்கு நகரம் சரியான அமைப்பை வழங்கியது.

யமஹா அனுபவ மண்டலம் நிகழ்வின் முக்கிய சிறப்பம்சமாக இருந்தது, இதில் கலந்து கொண்டவர்களைக் கவர்ந்த அதிவேக செயல்பாடுகள் இடம்பெற்றன. விர்ச்சுவல் பந்தயத்தின் அட்ரினலினில் மூழ்கி, மோட்டோ ஜிபி கேமிங் அமைப்பை பார்வையாளர்கள் அனுபவித்தனர். சாமுராய்-தீம் எம்டி-03 ஒரு விருப்பமான புகைப்பட இடமாக மாறியது, அதே நேரத்தில் ஒய்இசட்எஃப்-ஆர்15 ஒரு ரேஸ்ட்ராக் மூலையின் அவசரத்தை உருவகப்படுத்தி, வியத்தகு ஒல்லியான போஸ் கொடுக்கும் தனித்துவமான அனுபவத்தை வழங்கியது. உற்சாகத்தை கூட்டி, ரே இசட்ஆர் ஸ்ட்ரீட் பேரணியில் உடனடி புகைப்படப் பகிர்வு இடம்பெற்றது, இதனால் ரசிகர்கள் தங்கள் நேசத்துக்குரிய நினைவுகளைப் படம்பிடித்து வீட்டிற்கு எடுத்துச் செல்ல அனுமதித்தனர்.

இந்த நிகழ்வானது குறிப்பிடத்தக்க ஈடுபாட்டைக் கண்டது, பார்வையாளர்கள் மோட்டார் சைக்கிள் ஓட்டுவதில் மிகுந்த ஆர்வம் காட்டினர் மற்றும் யமஹா மீதான தங்கள் விருப்பத்தை வெளிப்படுத்தினர். இதற்கு பதிலளிக்கும் விதமாக, நிறுவனம் காமிக் கான் சூப்பர் ஃபேன் பாக்ஸ் மற்றும் யமஹாவின் பிரத்யேக காமிக் கான் கருப்பொருள் பொருட்களையும், மற்ற யமஹா இன்ன பிற பொருட்களையும் மிகவும் ஈர்க்கும் காஸ்ப்ளேயர்கள் மற்றும் காமிக்ஸ் மற்றும் மோட்டார் சைக்கிள் ஆர்வலர்களுக்கு வழங்கியது.

சென்னை காமிக் கான் 2025 முடிவடையும் நிலையில், இந்திய இளைஞர்களிடையே ஆழமாக எதிரொலிக்கும் புதுமையான அனுபவங்களை உருவாக்குவதில் யமஹா தனது அர்ப்பணிப்பை மீண்டும் வலியுறுத்துகிறது.

ஞாமிக் கான் போன்ற நிகழ்வுகள், பிரீமியம் மற்றும் டைனமிக் மோட்டார்சைக்கிள் பிராண்டாக யமஹாவின் நிலைப்பாட்டை உயர்த்திக் காட்டுவது மட்டுமின்றி, மோட்டார்சைக்கிளிங்கின் சுவாரஸ்யத்தை பாப் கலாச்சாரத்தை துடிப்பான உணர்வோடு கலந்து இளம் இந்தியர்களுடன் அதன் தொடர்பை வலுப்படுத்துகிறது. யமஹா தனிநபர்களை ஊக்குவிக்கவும் ஈடுபடுத்தவும் அர்ப்பணிப்புடன் உள்ளது, மேலும் தலைமுறைகளுக்கு வாழ்நாள் முழுவதும் ஆர்வமுள்ள சமூகத்தை வளர்க்கிறது.

# வண்ணாரப்பேட்டை மற்றும் சுற்றுப்புற பகுதியில் வழிப்பறி மற்றும் வாகன திருட்டில் ஈடுபட்ட 3 நபர்கள் கைது. 1 இலகுரக சரக்கு வாகனம், 1 கார், 2 இருசக்கர வாகனங்கள் மற்றும் 9 செல்போன்கள் பறிமுதல்.

சென்னை, 10 பிப்ரவரி 2025: சென்னை, பழைய வண்ணாரப்பேட்டை, மாடல் லைன் அவுசிங்போர்டு பகுதியில் வசித்து வரும் அப்துல் ரகுமான், வ/38, த/பெ.காஜாமைதீன் ராதாகிருஷ்ணன் என்பவர் 07.02.2025 திருவொற்றியூர் நெடுஞ்சாலை மற்றும் கல்லறை சாலை சந்திப்பு அருகே நடந்து சென்று கொண்டிருந்தார். அப்போது, ஒரே இருசக்கர வாகனத்தில் வந்த 3 நபர்கள் அப்துல் ரகுமானை வழிமறித்து தகாத வார்த்தைகளால் பேசி கத்தியைக் காட்டி மிரட்டி, அவர் வைத்திருந்த பணம் ரூ.800/-ஐ பறித்துக் கொண்டு தப்பிச் சென்றனர். இது குறித்து அப்துல் ரகுமான் எச்-1 வண்ணாரப்பேட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின் பேரில், வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது. எச்-1 வண்ணாரப் பேட்டை காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை மற்றும் தேடுதலில் ஈடுபட்டு, மேற்படி வழிப்பறியில் ஈடுபட்ட 1.அகஸ்டின் ஈபன் இன்பராஜ், வ/54, த/பெ. தங்கராஜ், விளவங்கோடு, கன்னியாகுமரி மாவட்டம், 2.பாரதிராஜா (எ) பாரதி, வ/36, வடபுரம், ஸ்ரீ வள்ளிகுண்டம், தூத்துக்குடி மாவட்டம், 3.ரவி, வ/55, த/பெ.பழனிசாமி, சமத்துவபுரம், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம் ஆகிய 3 நபர்களை கைது செய்தனர்.

விசாரணையில் மேற்படி எதிரிகள் மூவரும் சேர்ந்து, வண்ணாரப்பேட்டை, இராயபுரம் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் வாகனங்கள் மற்றும் செல்போன்களை திருடியுள்ளதும் தெரியவந்தது. எனவே, இவர்களிடமிருந்து 1 அசோக் லேலண்ட் தோஸ்த் இலகுரக சரக்கு வாகனம், 1 டவேரா கார், 2 இருசக்கர வாகனங்கள் மற்றும் 9 செல்போன்கள் பறிமுதல் செய்யப்பட்டது.

கைது செய்யப் பட்ட எதிரிகள் மூவரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட உள்ளனர்.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

# “நல்லாட்சிக்கான நற்சான்றிதழ்தான் ஈரோடு கிழக்கு வெற்றி!” - கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிக்கை.

சென்னை, 10 பிப்ரவரி 2025: ஈரோடு கிழக்கு சட்டமன்ற இடைத்தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் தலைமையிலான கூட்டணி சார்பில் போட்டியிட்ட வெற்றி வேட்பாளர் வி.சி. சந்திரகுமார் அவர்கள் ஒரு லட்சத்து 15 ஆயிரத்துக்கும் மேலான வாக்குகளைப் பெற்று மாபெரும் வெற்றியைப் பெற்றுள்ளார். இந்த மகத்தான வெற்றியை வழங்கிய ஈரோடு கிழக்கு வாக்காளப் பெருமக்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தோழமையின் இலக்கணமாகச் செயல்பட்டு, கழகத்தின் வெற்றிக்காக உழைத்த தமிழ்நாடு காங்கிரஸ் கட்சிக்கும் தோழமைக் கட்சியினர் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தோழமைக் கட்சித் தலைவர்கள், தொண்டர்கள் ஆற்றிய பணியை மறக்க முடியாது. பல்வேறு சமூக அமைப்புகள், கட்சிகள் தி.மு.க.வின் வெற்றிக்காகப் பணியாற்றினார்கள். அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும், அதன் கூட்டணிக் கட்சிகளுக்கும், மக்கள் ஆதரவுடன் 2021-ஆம் ஆண்டு அமைந்த இந்த ஆட்சிக்கும், நாம் செயல்படுத்தி வரும் உன்னதமான திட்டங்களுக்கும் மக்கள் அளித்துள்ள மாபெரும் அங்கீகாரம்தான் இந்த வெற்றி! தேர்தலுக்கு முன்னதாகவே வெற்றி யாருக்கு என்பதை உணர்ந்து விட்ட எதிர்க்கட்சிகள், களத்துக்கே வராமல் புறமுதுகிட்டு ஓடிய காட்சியையும் முன்கூட்டியே தமிழ்நாடு பார்த்து விட்டது.

2019 முதல் நடைபெற்ற இரண்டு நாடாளுமன்றத் தேர்தல்கள், சட்டமன்றப் பொதுத் தேர்தல், உள்ளாட்சி அமைப்புத் தேர்தல்கள், இடைத்தேர்தல்கள் ஆகிய அனைத்திலும் தி.மு.க. கூட்டணியானது தொடர் வெற்றியைப் பெற்று வந்துள்ளது. முக்கிய எதிர்க் கட்சியான அ.தி.மு.க. படுதோல்வியை அடைவதையே தொடர்கதையாக அமைந்தது. எனவே தேர்தல் களத்துக்கே வராமல் விக்கிரவாண்டி இடைத் தேர்தலில் பங்கெடுக்காமல் தலைமறைவானது அ.தி.மு.க. ஈரோடு கிழக்கு இடைத் தேர்தலில் அ.தி.மு.க.வுக்குப் பாடம் புகட்ட மக்கள் தயாரான நிலையில் இங்கும் பதுங்கி விட்டது. தொடர் தோல்விகளால் ஏற்பட்ட சோர்வும், தேர்தல்களை எதிர்கொள்ளத் தைரியம் இல்லாமலும் போன அ.தி.மு.க. இன்று மக்கள் மனதில் இருந்து மெல்லமெல்ல மறைந்து மங்கிக் கொண்டிருக்கிறது என்பதே முழு உண்மையாகும்.

திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணியைப் பொருத்தவரையில் மூன்றரை ஆண்டு கால திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை மக்கள் முன் வைத்தோம். தமிழ்நாட்டின் ஒவ்வொரு குடும்பமும் தனிப்பட்ட முறையில் பயனடையும் திட்டங்களை நிறைவேற்றி வருவதை அனைவரும் நேரடியாக உணர்ந்துள்ளார்கள். சாதனைகளைச் சொல்லி வாக்குக் கேட்கும் நிலையையும் தாண்டி, சாதனைகள் என்பவை மக்கள் மனதில் பதிந்ததாக இருந்தது. மகத்தான திட்டங்களைத் தரும் தி.மு.க. அரசுக்கு, மகத்தான வெற்றியைத் தர மனமுவந்து மக்கள் முடிவெடுத்தார்கள். தங்களது பெரிய எண்ணத்தை எண்ணிக்கையாகக் காட்டி வாக்குகளை அள்ளித் தந்துள்ள ஈரோடு கிழக்கு வாக்காளப் பெருமக்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கழக வேட்பாளராக அறிவிக்கப்பட்ட ஆருயிர் சகோதரர் சந்திரகுமாரை, வெற்றி வேட்பாளராக ஆக்கி - சட்டமன்றத்துக்குள் அழைத்து வர உழைத்த தேர்தல் பொறுப்பாளர் மாண்புமிகு சு. முத்துசாமி உள்ளிட்ட தலைவர் கலைஞரின் உயிரினும் மேலான அனைத்து உடன்பிறப்புகளுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் சந்திரகுமார் அவர்கள், அத்தொகுதியின் மக்கள் பிரதிநிதியாக இருந்து தொகுதி மக்கள் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் முன்மாதிரி சட்டமன்ற உறுப்பினராகச் செயல்படுவார்.

எங்களது நன்றியின் அடையாளமாக எப்போதும் மக்களுக்கு உண்மையாக இருப்போம்! ஈரோடு கிழக்கு தொகுதியை மட்டுமல்ல மேற்கு மண்டலம் முழுவதையும் வளப்படுத்த, மேம்படுத்தத் தேவையான திட்டங்களைச் செயல்படுத்திக் காட்டுவோம். மேற்கு மண்டல மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றிக் காட்டுவோம் என்று உறுதி அளிக்கிறேன்.

# சைதாப்பேட்டை பகுதியில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட குட்கா பாக்கெட்டுகளை பதுக்கி வைத்து விற்பனை செய்த நபர் கைது. 150 கிலோ குட்கா பாக்கெட்டுகள் பறிமுதல்.

சென்னை, 10 பிப்ரவரி 2025: ஜே-1 சைதாப்பேட்டை காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில் காவல் குழுவினர் 08.02.2025 அன்று சைதாப்பேட்டை, சாரதி நகர் பகுதியில்



உள்ள ஒரு வீட்டை கண்காணித்து, அங்கு தமிழக அரசால் தடை செய்யப்பட்ட குட்கா புகையிலை பாக்கெட்டுகள் பதுக்கி வைத்து விற்பனை செய்த இராமநாதரபும் மாவட்டத்தைச்சேர்ந்த சைபுல் ஹக், வ/25, த/பெ.அஜீஸ் அலி, சாரதி நகர், சைதாப்பேட்டை, சென்னை என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 150 கிலோ எடை கொண்ட ஹான்ஸ், கூலிப், ரெமோ உள்ளிட்ட குட்கா புகையிலை பாக்கெட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டது.

கைது செய்யப்பட்ட எதிரி சைபுல் ஹக் விசாரணைக்குப் பின்னர் 08.02.2025 அன்று சிதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

# புளியந்தோப்பு பகுதியில் வாலிபரை கையால் தாக்கி, கத்தியைக்காட்டி மிரட்டி பணம் பறித்த 2 சரித்திரப்பதிவேடு குற்றவாளிகள் கைது.

சென்னை, 10 பிப்ரவரி 2025: சென்னை, புளியந்தோப்பு, 9வது தெரு, திரு.வி.க நகர், பகுதியில் வசித்து வரும் ரகு, வ/20, த/பெ.ராஜா என்பவர் கடந்த 06.02.2025 அன்று இரவு புளியந்தோப்பு, வாசுகி நகர் புது பாலம் அருகில் நடந்து சென்று கொண்டிருந்த போது, அங்கு நின்று கொண்டிருந்த 2 நபர்கள் மேற்படி ரகுவை வழிமறித்து அவதூறாக பேசி கையால் தாக்கி கத்தியை காட்டி மிரட்டி அவரிடமிருந்து ரூ.1,000/- பறித்துக்கொண்டு தப்பிச்சென்றுள்ளனர். இது குறித்து ரகு பி-1 புளியந்தோப்பு காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் வழக்குப் பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

பி-1 புளியந்தோப்பு காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட 1.சூர்யா, வ/24, த/பெ.கோபால், திரு.வி.க நகர், புளியந்தோப்பு, சென்னை 2.நிரஞ்சன், வ/19, த/பெ. சங்கர், கன்னிகாபுரம், சென்னை ஆகிய இருவரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து 1 கத்தி பறிமுதல் செய்யப்பட்டது.

மேலும் விசாரணையில் கைது செய்யப்பட்ட சூர்யா மீது 6 வழக்குகளும், நிரஞ்சன் மீது 3 வழக்குகள் உள்ளதும், இருவரும் பி-1 புளியந்தோப்பு காவல் நிலைய சரித்திரப் பதிவேடு குற்றவாளிகள் என்பதும் தெரியவந்தது.

கைது செய்யப் பட்ட இருவரும் விசாரணைக்குப் பின்னர் 08.02.2025 நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டனர்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி



## “ஒன்றிய ஆட்சியாளர்களே... வஞ்சிப்பது உங்கள் வழக்கம்... வாழ வைப்பதும்... வளர்த்தெடுப்பதும் எங்களின் பழக்கம்! - கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் உரை.

சென்னை, 10 ஜனவரி 2025: இன்று (08-02-2025) அன்று திருவள்ளூர் மாவட்டம் ஆவடியில் நடைபெற்ற 'தமிழ்நாட்டை வஞ்சிக்கும் மோடி அரசுக்கு எதிரான மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு ஆற்றிய உரையின் விவரம் வருமாறு:



இந்தக் கூட்டத்தைத் தொடங்கும் முன்பு, ஒரு மகிழ்ச்சியான செய்தியை உங்களோடு நான் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். பெரியார் மண்ணில் நாம் பெரு வெற்றி பெற்றுவிட்டோம். ஈரோடு கிழக்கு சட்டமன்ற இடைத் தேர்தலில், கழகத்தை எதிர்த்து போட்டியிட்ட அத்தனை பேரும் டெபாசிட் இழந்திருக்கிறார்கள் என்ற வெற்றிச் செய்தியை, இந்தக் கூட்டத்தின் வாயிலாக உங்களிடம் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசிற்கு எதிராக, இன்றைக்குத் தமிழ்நாடு முழுவதும் நாம் கண்டனப் பொதுக்கூட்டம் நடத்திக் கொண்டிருக்கிறோம்! நடத்திக் கொண்டிருக்கிறோம் என்று சொல்வதைவிட, நடத்தும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம் என்றுதான் சொல்ல வேண்டும்! மிகவும் வேதனையான மனநிலையோடு இந்தக் கூட்டத்தை நாம் நடத்திக் கொண்டிருக்கிறோ

தொண்டை மண்டலத்தின் நுழைவு வாயிலாக - ஜார்ஜ் கோட்டைக்கு வழித்தடம் அமைத்த மாவட்டமாக விளங்கும் இந்த திருவள்ளூர் மாவட்டமும், தமிழ்நாட்டு உரிமைகளுக்கான போராட்டமும் பிரிக்க முடியாத ஒன்று! மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்டபோது நடந்த எல்லைப் போராட்டத்தில் இந்த மாவட்டத்துக்கு முக்கியப் பங்குண்டு!

“திருத்தணி தமிழ்நாட்டுக்குதான் சொந்தம்” என்று ம.பொ.சி. அவர்கள் தலைமையில் நடந்த போராட்டத்தில் நாமும் இணைந்து போராடுவோம்! சித்தூர் திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டில், “திருத்தணி தமிழ்நாட்டுக்குத்தான் சொந்தம்” என்று தீர்மானம் நிறைவேற்றியதோடு, வட ஆர்க்காடு மாவட்டத்தில் இருப்பவர்களையும் இந்தப் போராட்டத்தில் கலந்து கொள்ள வைத்தார் பேரறிஞர் அண்ணா! அதுமட்டுமல்ல, அந்தப் போராட்டத்தை முன்னெடுத்த ம.பொ.சி அவர்களை, அன்றைய பிரதமர் நேரு அவர்கள் கடுமையாக விமர்சித்தார் என்று தமிழ்நாடு முழுவதும் ரயில் மறியல் அறிவித்தார் பேரறிஞர் அண்ணா! திருத்தணியைக் காக்க தமிழ்நாடு முழுவதும் ரயில் மறியல் போர் நடத்தி கைதான இயக்கம்தான் நம்முடைய இயக்கம்! அப்போது பேரறிஞர் அண்ணா - முத்தமிழறிஞர் கலைஞர் உள்ளிட்ட அனைவரும் சிறை வைக்கப்பட்டதால், கழகத்தின் யொறுப்பாளராக மதிப்பிற்குரிய ஏ.ஜி. அவர்களை நியமித்தார் அண்ணா! நம்முடைய போராட்டத்தைக் கட்டுப்படுத்த தமிழ்நாடு முழுவதும் 17 இடங்களில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது... அதில் நான்கு தொண்டர்கள் மரணம் அடைந்தார்கள்! இவ்வாறு திருத்தணியை அன்றைக்குக் காத்தோம்! இன்றைக்குத் தமிழ்நாட்டின் உரிமைக்குக் குரல் கொடுக்க ஒன்று கூடியிருக்கிறோம்!

இந்தப் பொதுக்கூட்டத்தை மிகப் பிரமாண்டமாகவும் - எழுச்சியோடும் ஏற்பாடு செய்திருக்கும் மாண்புமிகு நாசர் அவர்களை நான் மனதாரப் பாராட்டுகிறேன்! இளைஞரணி உருவான காலத்தில் இருந்து, என்னோடு தோள் கொடுத்து நிற்கும் தோழன்தான் நாசர் அவர்கள்! இன்றைக்குத் தமிழ்நாடு முழுவதும் ஒவ்வொரு ஊரிலும் கழகக் கொடி கம்பீரமாகப் பறக்கிறதே, அதை ஏற்றி வைக்க நான் கிராமம் கிராமமாகச் சென்றபோது, என்னுடன் இருந்தவர் நம்முடைய அருமை நண்பர் நாசர் அவர்கள்! அன்றைக்கு எப்படி பார்த்தேனோ... அதே துடிப்போடும் - பரபரப்போடும் இன்றைக்கும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்! அவருக்குப் பக்கபலமாகத் துணை நிற்கும் சந்திரன் உள்ளிட்ட திருவள்ளூர் மாவட்டக் கழகங்களின் நிர்வாகிகளுக்கும் - முன்னணியினர் அனைவருக்கும் என்னுடைய பாராட்டுகள்! வாழ்த்துகள்! நன்றிகள்! உங்களுடைய ஆதரவால் - உழைப்பால் உருவானதுதான் நம்முடைய திராவிட மாடல் ஆட்சி! அதற்கு நான் என்றென்றும் நன்றியுடையவனாக இருப்பேன்!

2021-ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் என் மேல் நம்பிக்கை வைத்து, தமிழ்நாட்டு மக்கள் ஆட்சிப் பொறுப்பை வழங்கினார்கள்! மக்கள் என் மேல் வைத்திருக்கும் நம்பிக்கையை நான் காப்பாற்றிக் கொண்டிருக்கிறேன்! இந்த மூன்றரை ஆண்டுகளில், ஏராளமான திட்டங்களை நிறைவேற்றி, தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலமாக வளர்த்தெடுத்து வருகிறோம்! அது, ஊடகங்கள் வெளியிடும் புள்ளி விவரங்களாக இருந்தாலும் சரி - தனியார் அமைப்புகள் வெளியிடும் சர்வேக்களாக இருந்தாலும் சரி - ஏன், ஒன்றிய அரசே வெளியிடும் புள்ளி விவரங்களாக இருந்தாலும் சரி - அதில் அனைத்தும் தமிழ்நாடுதான் முன்னணியில் இருக்கிறது!

* இந்தியாவின் மிகப் பெரிய பொருளாதாரம் கொண்ட மாநிலங்களின் பட்டியலில், தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் இருக்கிறது!

* தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தமிழ்நாட்டின் பங்கு, உயர்ந்திருக்கிறது.

* 2030-ஆம் ஆண்டுக்குள் ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரத்தை அடைய வேண்டும் என்று ஒரு மிகப் பெரிய குறிக்கோளை வைத்து, நாள்தோறும் உழைத்துக் கொண்டிருக்கிறோம்!

* பொருளாதாரக் குறியீடுகள் அனைத்திலும், தமிழ்நாடு வளர்ச்சியை எட்டி இருக்கிறது.

* வறுமை இல்லாத மாநிலமாக - பட்டினிச் சாவுகள் அறவே இல்லாத மாநிலமாகத் தமிழ்நாடு இருக்கிறது.

* கடந்த மூன்று ஆண்டுகளில், 10 லட்சம் கோடி ரூபாய்க்கும் அதிகமான தனியார் முதலீட்டுத் திட்டங்கள் வருவது உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

இந்த வளர்ச்சியுடன் ஒவ்வொரு தனிமனிதருக்கும் நன்மை அளிக்கும் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறோம்! முத்தாய்ப்பான சில திட்டங்களை மட்டும் சொல்ல விரும்புகிறேன்...

* மாதம் ஆயிரம் ரூபாய் என்று, ஒரு ஆண்டுக்கு 12 ஆயிரம் ரூபாயை ஒரு கோடியே 16 லட்சம் பெண்களுக்கு, கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் கொடுக்கிறோம்! அதே போன்று, புதுமைப்பெண் திட்டத்திலும் - தமிழ்ப்புதல்வன் திட்டத்திலும், ஆண்டொன்றுக்கு 12 ஆயிரம் ரூபாய் வழங்குகிறோம்! பெண் விடுதலைக்கு அச்சாரமாக, வேலைவாய்ப்புகளை உருவாக்கி, அவர்கள் இலவசமாகப் பயணம் செய்ய, “விடியல் பயணத் திட்டம்” - பாதுகாப்பாக வெளியூர்களில் தங்க, “தோழி விடுதித் திட்டம்” என்று செயல்படுத்திக் கொண்டு வருகிறோம்!

இன்னும் சொல்ல வேண்டும் என்றால், அமைதியான - பாதுகாப்பான மாநிலமாக இருப்பதால், அதிகளவில் பெண்கள் வேலைக்குச் செல்லும் மாநிலமாக நம்முடைய தமிழ்நாடு இருக்கிறது! அடுத்து, வருங்காலத் தலைமுறை வலிமையான தலைமுறையாக வளர, சத்தான - சுவையான காலை உணவைக் கொடுக்கிறோம்! தமிழ்நாட்டு மாணவர்கள் என்றால், உடனே வேலை கொடுக்கும் அளவிற்கு, நம்முடைய மாணவர்களின் திறமையை மேம்படுத்த, நான் முதல்வன் திட்டத்தில் திறன் பயிற்சி கொடுக்குறோம்!

* ஒன்றிய அரசு வெளியிட்ட பொருளாதார ஆய்வறிக்கையில் தமிழ்நாட்டின் பல்வேறு திட்டங்கள் பாராட்டப் பட்டிருக்கிறது. அனைத்துத் துறைகளிலும், மேல் நோக்கிய வளர்ச்சியைத் தமிழ்நாடு அடைந்து வருகிறது.

இத்தகைய சூழலில் தமிழ்நாடு அரசுக்கு ஒத்துழைக்கும் ஒன்றிய அரசு மட்டும் இருந்திருந்தால் தமிழ்நாடு இன்னும் வேகமாக வளர்ந்திருக்க முடியும்.

தமிழ்நாட்டு மக்களான நீங்கள் முழுமையான வெற்றியை இந்தியா கூட்டணிக்குக் கொடுத்ததைப் போன்று, சில மாநிலங்களில் பெற முடியாததால், சிறிய வித்தியாசத்தில் மீண்டும் ஒன்றியத்தில் பா.ஜ.க. கூட்டணி ஆட்சியே அமைந்துவிட்டது. மூச்சுக்கு மூச்சு 400 சீட் வெற்றி பெறுவோம் என்று சொன்னாலும், இறுதியில் 240 இடங்கள்தான் கிடைத்தது. இறுதியில், கூட்டணிக் கட்சிகள் தயவோடு ஒரு மைனாரிட்டி அரசைத்தான் அமைக்க முடிந்தது. ஆனாலும், பா.ஜ.க. அரசு தன்னுடைய பாசிச - சர்வாதிகார - எதேச்சாதிகாரத் தன்மையை விட்டு இறங்காமல் - பழையபடியே நடந்து கொள்வதைத்தான் பார்க்கிறோம். மதவாத அரசியலை நடத்தி - மக்களை ஒரு மயக்கத்தில் வைத்து - அரசியல்ரீதியாக லாபம் அடையலாம் என்று நினைக்கிறார்களே தவிர, மக்களுக்கு நல்லது செய்து - மாநிலங்களுக்குத் திட்டங்களை தந்து வளர வேண்டும் என்ற நினைப்பே பா.ஜ.க.விற்கு வராது! மதவாத அரசியல் மூலமாக, மக்களிடம் இருந்து ஓட்டு அறுவடை செய்து, காலத்தை ஓட்ட நினைக்கிறார்கள்.

அதனால்தான், ஒன்றிய அரசின் சார்பில் ஆண்டுதோறும் வெளியிடப்படும் நிதிநிலை அறிக்கை, வெற்று அறிக்கையாக இருக்கிறது! ஒன்றிய நிதி அமைச்சர் மாண்புமிகு நிர்மலா சீதாராமன் அவர்களால், நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்த இந்தியாவிற்கே எதுவும் இல்லை. திருக்குறளை மேற்கோள் காட்டினால் போதும், தமிழ்நாட்டை ஏமாற்றிவிடலாம் என்று நினைக்கிறாரா நிதி அமைச்சர்? இப்போது புதிதாக தெலுங்கு கவிதையையும் மேற்கோள் காட்டுகிறார். 'நாடு என்றால் வெறும் மண் அல்ல; அதன் மக்கள்தான்' என்பது அப்பாராவ் எழுதிய அந்த கவிதையின் பொருள். அந்த மக்களுக்காக என்ன அறிவித்தார்கள்? எதுவும் இல்லை! தெலுங்கில் ஒரு பழமொழி சொல்வார்கள்... 'பேரு பெத்த பேரு... தாக நீலு லேது...' என்று சொல்வார்கள். பெயர்தான் பெரிய பெயர் - ஆனால் குடிக்கத் தண்ணீர் கூட கொடுக்க மாட்டார்கள் என்று அதற்கு அர்த்தம். அது போன்றுதான் பெயர் என்னவோ ஒன்றிய பட்ஜெட் - இந்தியாவிற்கான பட்ஜெட் - வளர்ச்சி பட்ஜெட்! ஆனால், அது எதுவும் அதில் இருக்காது. அனைத்துப் பகுதிக்குமான வளர்ச்சியை உறுதி செய்திருப்பதாகப் பிரதமரு - நிதி அமைச்சரும் சொல்கிறார்கள். அனைத்துப் பகுதியின் பெயரும் இந்த பட்ஜெட்டில் இடம் பெற்றிருக்கிறதா? என்று கொஞ்சமாவது மனச்சாட்சியுடன் பதில் சொல்லுங்கள். ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை என்பது அனைத்துத் தரப்பினரையும் ஏமாற்றும் வகையில் அமைந்திருக்கிறது.

## டாபர் நிறுவனத்தின் வாய் சுகாதார விழிப்புணர்வு இயக்கம் தென்னிந்தியா முழுவதும் இலவச பல் மருத்துவ முகாம்கள் மூலம் தொடக்கம்.

சென்னை 10, பிப்ரவரி 2025: வாய் சுத்த பராமரிப்புத் துறையில் ஆயுர்வேதத் தீர்வுகளை வழங்கும் முன்னணி நிறுவனமான டாபர், தென்னிந்தியாவில் மாபெரும் பல் சுத்த பராமரிப்பு இயக்கத்தை முன்னெடுத்துள்ளது. அதனடி இந்திய பல் மருத்துவ சங்கத்துடன் (மிஞிகி) இணைந்து பல் மருத்துவ முகாம்களைத் தொடங்கியுள்ளது. 2025 ஆம் ஆண்டுக்கான பல் மருத்துவ மாநாட்டில் இவ்வியக்கம் குறித்து முறையாக அறிவிக்கப்பட்டது. ‘மாற்றத்தை நோக்கி பல் மருத்துவம்: புதுமை செய், ஒன்றுசேர், மேலோங்கு’ - என்பதே இவ்வாண்டு மாநாட்டின் கருப்பொருள் ஆகும்.




தென்னிந்தியா, டாபரின் முக்கியமான சந்தை ஆகும். டாபர் சிவப்பு பற்பசை, தமிழ்நாட்டிலும் ஆந்திரப் பிரதேசத்திலும் பல் பராமரிப்பு சந்தையில் முதலிடம் வகிக்கிறது. அதேபோல கர்நாடகத்திலும் தெலங்கானாவிலும் வலுவான இடத்தைப் பிடித்திருக்கிறது.

வாய்ச்சுத்த பராமரிப்பிலும் சமூக நலத்திலும் அக்கறை கொண்ட டாபர், பிராந்திய அளவிலான சந்தையின் தேவைகளையும் உள்வாங்கி, தனது செயல்பாடுகளை விரிவாக்கிவருகிறது.

2025 ஆம் ஆண்டுக்கான பல் மருத்துவ மாநாட்டில் ஓர் அனுபவக் கலந்துரையாடல் நிகழ்வை டாபர் ஏற்பாடு செய்திருந்தது. அங்கு ஆயுர் வேதத்தையும் நவீன மருத்துவ அறிவியலையும் எவ்வாறு வாய் சுத்த பராமரிப்புக்கு பயன்படுத்தலாம் என்பது குறித்து நிகழ்வு முன்னெடுக்கப் பட்டது. இந்திய பல் மருத்துவ சங்கத்துடன் இணைந்து உள்ளூர் பல் மருத்துவர்களுடன் கைகோர்த்து வாய் சுகாதாரப் பிரச்சனைகளுக்கு எவ்வாறு ஆயுர்வேதம் மூலம் தீர்வு காணலாம் என்பதை எடுத்துக்காட்ட டாபர் தொடர்ந்து முனைகிறது.

அச்சங்கத்துடன் இணைந்து இப்பகுதி முழுவதும் இலவச பல் மருத்துவ முகாம்களை நடத்துவதுடன் சூரு கிராமத்தை தேர்ந்தெடுத்து அங்கு பல் பராமரிப்பு குறித்த வழிகாட்டுதலையும் வழங்க இருக்கிறது. மேலும், அவ்வமைபுடன் இணைந்து, பதிவு செய்யப்பட்ட மருத்துவர்கள் மற்றும் அமைப்புகள் வாயிலாக இத்தகைய முகாம்களை நடத்த இருக்கிறது. இதன் மூலம் வாய் சுகாதாரம் தொடர்பான சேவை விளீவான அளவுக்கு மக்களை சென்றடையும்.

இந்நிகழ்ச்சியில் பேசிய டாபர் இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் துணைப் பொது மேலாளர் பினித் குமார், டாபர் நிறுவனத்தின் தென்னிந்திய வணிக விரிவாக்கத் திட்டங்களை வலியுறுத்திப் பேசினார்.

“மருத்துவ ரீதியில் நிருபிக்கப்பட்ட ஏழு பயன்களை கொண்ட டாபர் சிவப்பு பற்பசையை நாட்டின் தலைசிறந்த (நம்பர் ஒன்) ஆயுர்வேத பற்பசையாக இந்திய பல் மருத்துவ சங்கம் அங்கீகரித்தது மகிழ்ச்சியளிக்கிறது. இந்த அங்கீகாரம், எங்களது வாடிக்கையாளர்கள் எங்கள் தயாரிப்புகளின் மீது கொண்டுள்ள நம்பிக்கை, அன்பின் பிரதிபலிப்பு ஆகும். இந்நிலையில் பல் மருத்துவ சமூகத்துடன் எங்களது கூட்டுறவை வலுப்படுத்தவும் பல் பராமரிப்புக்காக மருத்துவ ரீதியில் நிருபிக்கப்பட்ட ஆயுர்வேத தயாரிப்பு பயன்பாட்டை ஊக்குவிக்கவும் செயல்பட உள்ளோம்” என்றார்.

மேலும் அவர், “அண்மையில் தமிழகத்தில் டாபர் நிறுவனத்தின் உற்பத்தி பிரிவை தொடங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டுள்ளோம். இது தென்னகத்தில் எங்களது கரத்தை மேலும் பலப்படுத்தும். அதிகரித்து வரும் டாபர் பொருட்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக மட்டும் இந்த உற்பத்திப் பிரிவு தொடங்கப் படவில்லை மாறாக, எதிர்காலத்தில் பல்வேறு புதுமையான கண்டுபிடிப்புகளைக் கொண்டு வரவும் சமூகப் பணி சார்ந்த செயல்பாடுகளை மேற்கொள்ளவும்தான் இது தொடங்கப் படுகிறது” என்றார் அவர்.

டாபரின் புதிய முயற்சிகள் குறித்துப் பேசிய அவர், ” அண்மையில் குழந்தைகளுக்காக நஞ்சற்ற (தீமை செய்யும் பொருட்கள் இல்லாத) ஆயுர்வேத பற்பசையை இரண்டு நறுமணங்களில் அறிமுகப்படுத்தியிருக்கிறோம். அடுத்த கட்டமாக வாடிக்கையாளர்களின் தேவையைப் பொறுத்து பல்வேறு புதிய வகைப் பற்பசைகளை அறிமுகப்படுத்த இருக்கிறோம்” என்றார்.

வியூக ரீதியிலான முதலீடுகள், புதுமையான தயாரிப்புகள், சமூகம்சார் செயல்பாடுகள் ஆகியவற்றின் மூலமாக டாபர் நிறுவனம் ஒட்டுமொத்த வாய் சுகாதாரம், நல வாழ்வு ஆகியவற்றை தென்னிந்தியாவுக்கு வழங்க உறுதிபூண்டு நடைபோட்டு வருகிறது.

## தனைரா மற்றும் ஜே ஜே ஆக்டிவ் வழங்கும் மகத்தான புடவை ஓட்டம் நிகழ்ச்சி சென்னையில் நடைபெறுகிறது - பெண்மை, உறுதி மற்றும் பண்பாட்டு பெருமையைக் கொண்டாடும் ஒரு நிகழ்ச்சி

சென்னை 10, பிப்ரவரி 2025: டாடாவின் தயாரிப்பான தனைரா, பெங்களூரைச் சேர்ந்த பிட்னஸ் நிறுவனமான ஜே ஜே ஆக்டிவ் உடன் சேர்ந்து சென்னையில் இந்த ஞாயிற்றுக்கிழமை பெண்கள் புடவை அணிந்தபடி, உயிர்துடிப்பு மிக்க அதிகாலை ஓட்டத்தில் கலந்து கொள்ளும் நிகழ்ச்சி ஒன்றை ஒருங்கிணைத்துள்ளது. சென்னை நகரம் முழுவதுமுள்ள யெண்கள் கலைநயமிக்க சேலைகளை அணிந்து நொளம்பூரில் கூடி இந்த ஓட்ட நிகழ்ச்சியில் பங்கேற்றனர். பெண்மை, உடல் திறன் மற்றும் சுதந்திரத்துக்கான அர்ப்பணிப்பாக இந்நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த சென்னை தனைரா புடவை ஓட்டம் [சென்னை சாப்டர் ஆஃப் தனைரா சேரீ ரன் ]நிகழ்ச்சியை தனைராவின் யூலைமைச் செயல் அதிகாரியான திரு. அம்புஜ் நாராயணன் [சிஇஓ ஆஃப் தனைரா] கொடியசைத்துத் துவக்கிவைத்தார். அவருடன் ஜே ஜே ஆக்டிவின் பயிற்சியாளர் ப்ரமோத்தும் [கோச் பிரமோத், ஜே ஜே ஆக்டிவ்] உடனிருந்தார்.

பாரம்பரியத்தையும் நவீனத்தையும் கொண்டாடும் உயிர்ப்பு மிக்க கொண்டாட்டம் தனைரா புடவை ஓட்டம் [தனைரா சேரீ ரன்]. இந்த ஓட்ட நிகழ்வில் சமகால லட்சியங்களுடன், மகத்தான நம்முடைய மரபு அழகுற இணைகிறது. நவீனகால பெண்கள் பெண்மையின் வலுவை கம்பீரத்துடன் சமநிலையுடன் பேணுகிறார்களோ அப்படியாக புடவையை ஒரு உடையாக மட்டுமின்றி அவகளது ஆளுமையின், அடையாளத்தின், தன்னிறைவின், சுய வெளிப்பாட்டின் சின்னமாகவும் புடவை முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. இந்த தனித்துவம் கொண்ட ஓட்ட நிகழ்சி, சேலையின் ஆறு அடிகள் சம்பிரதாயக் கட்டுகளோடு பெண்ணை நிறுத்தவில்லை என்பதை நிரூபிக்கிறது. அவளை ஆற்றலுடன் இன்றைய உலகத்தின் மாறுதல்களுக்கேற்ப வாழ்க்கைப்

பயணத்தில் ஓட வைக்கிறதென்பதையும் தெரிவிக்கும் நிகழ்வாகும்.

புனே, பெங்களூரு, ஐதராபாத், கோல்கத்தா, அஹமதாபாத்தைத் தொடர்ந்து சென்னையில் நடைபெறும் புடவை ஓட்ட நிகழ்ச்சி பெண்களிடையே கூடுதல் அன்பையும் உறவையும் ஏற்படுத்தியுள்ளது. மன உறுதி மற்றும் பன்முகத் தன்மையின் தைரியமான அறிக்கையாக புடவையை இந்த ஓட்ட நிகழ்ச்சிகள் மாற்றியுள்ளன.



இந்த நிகழ்ச்சி பெற்றி தனைராவின் தலைமைச் செயல் அதிகாரியான அம்புஜ் நாராயண் [சிஇஓ, தனைரா] பேசும்போது, “தனைரா புடவை ஓட்ட நிகழ்ச்சி பெண்மைக்கும் உடல் திறனுக்கும் பெருமை சேர்க்கும் நிகழ்ச்சி ஆகும். நளினம் மற்றும் மன உறுதிக்கு அடையாளமாக விளங்கக் கூடிய புடவையைக் கொண்டாடும் வகையில் வலுவான, நவீன பெண்கள் அதை அணிகிறார்கள். இந்த ஓட்ட நிகழ்ச்சியின் வழியாக புடவை தொடர்பான பார்வைகளை மாற்ற விரும்புகிறோம். பெண்மையின் வலு மற்றும் பன்முகத்தன்மையின் அடையாளமாக புடவையை மறுவரையறை செய்யும் நிகழ்ச்சி இது. ஜே ஜே ஆக்டிவ் உடனான எங்களது கூட்டு செயல்பாடு இந்தப் பார்வையை வலுப்படுத்தி, இன்றைய வாழ்க்கை முறைகளுக்கு சேலை எப்படிப் பொருந்துகிறதென்பதைக் காட்டுகிறது. பண்பாட்டுக்கும் செயல்வேகத்துக்கும் அடையாளமான சென்னை நகரத்தில் இந்த நிகழ்ச்சியை நடத்துவது அதை உறுதிப் படுத்துவதற்கே.”

ஜே ஜே ஆக்டிவ்வின் பயிற்சியாளர் பிரமோத் பேசும்போது, “தங்கள் குடும்பத்தின் நலனுக்காக தொடர்ந்து பணியாற்றும் பெண்களுக்கு தங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவதற்கு குறைந்த நேரமே உள்ளது. யூனைரா புடவை ஓட்ட நிகழ்வு, பெண்கள் தங்கள் ஆரோக்கியத்தை சௌகரியமான பாதுகாப்பான சூழலில் முன்னிலைப்படுத்துவதற்கு ஞாபகமூட்டும் நிகழ்ச்சியாகும்.

வாழ்க்கையில் எதிர்கொண்ட சவால்களை வென்ற பெண்கள் தங்கள் கதைகளை சக பெண்களுக்குக் கூறி அவர்களை உற்சாகமூட்டும் நிகழ்ச்சியும் இது. தனைரா புடவை ஓட்ட நிகழ்வை நடத்தும் இந்தியாவின் ஆறாவது நகரம் சென்னை. தங்களைத் தன்னிறைவாக்கும் இயக்கத்தில் உற்சாகத்துடன் ஈடுபடுத்திக் கொண்ட சென்னை பெண்களின் அளப்பறிய உற்சாகத்தைப் பார்த்ததில் எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சி.”

# மதச்சார்பின்மை மற்றும் மக்கள் ஒற்றுமை காப்போம்! பொதுமக்களுக்கு மதச்சார்பற்ற கட்சிகளின் ே’’ண்டுகோள்!!

சென்னை, 10 பிப்ரவரி 2025: இந்தியாவின் பன்மைத்துவத்திற்கும், மத நல்லிணக்கத்திற்கும் சிறந்ததோர் எடுத்துக்காட்டுகளில் ஒன்று தமிழ்நாடாகும். தமிழ்நாட்டின் ஆன்மீகத் தலங்களான பழனியாண்டவர் கோவில், மதுரை மீனாட்சியம்மன் கோவில் உள்ளிட்ட இந்துமத திருத்தலங்கள், அன்னை வேளாங்கண்ணி ஆலயம், நாகூர் தர்கா, ஏர்வாடி தர்கா போன்ற அனைத்து வழிபாட்டுத் தளங்களிலும் மத வேறுபாடு இன்றி பொதுமக்கள் வழிபடுவதே இதற்கு சான்று.

இத்தகைய தமிழ்நாட்டில் மத வேறுபாடுகளை விதைத்து மக்களைப் பிரித்து அரசியல் ஆதாயம் தேடுவதற்கு சில அமைப்புகள் தொடர்ச்சியாக முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

மக்களை மத ரீதியாக பிளவுபடுத்தி அதில் அரசியல் ஆதாயம் தேடுவதை பாஜகவும் அதன் துணை அமைப்புகளான ஆர்.எஸ்.எஸ், விஸ்வ இந்து பரிஷத் உள்ளிட்ட வலதுசாரி அமைப்புகள் திட்டமிட்டு செய்து வருவது வழக்கமாகி இருக்கிறது. பாபர் மசூதி, அஜ்மீர் தர்கா என வரிசையாக இத்தகைய பிளவுவாத அரசியலைச் செய்து வருகின்றனர். அவர்களின் அடுத்த குறி தமிழ்நாடாக இருக்கிறது.

தமிழ்நாட்டிலும் கடந்த அதிமுக ஆட்சிக்காலத்தில் சிறு சிறு வலது சாரி அமைப்புகள் பாஜகவின் ஆதரவில் முளைவிட்டு வளரத் தொடங்கியிருந்தன. கடந்த மூன்றாண்டுகளாக அடங்கியிருந்தவர்கள் தேர்தலை கவனத்தில் கொண்டு தங்களின் பிளவுவாத அரசியலை தொடங்கியிருக்கின்றனர். பாரதிய ஜனதாவின் தேர்தல் அறுவடைக்காக தமிழ்நாட்டின் ஒற்றுமையை சீர்குலைத்திட திட்டமிட்டு சதிகளை அரங்கேற்றி வருகின்றன.

பத்து ஆண்டுகளுக்கும் மேலாக ஒன்றிய அரசை நடத்துகிற வாய்ப்பு கிடைத்தும் கூட பாஜக தமிழ்நாட்டின் நலன்களுக்கான நடவடிக்கை எதையும் சொல்லிக் கொள்ளும்படியாக செய்திடவில்லை என்பதை தமிழ்நாடு அறியும். 2025 ஆம் ஆண்டு ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையில் கூட தமிழ்நாட்டின் ரயில்வே மேம்பாட்டிற்கோ, கோவை - மதுரை புதிய மெட்ரோ ரயில் திட்ட அறிவிப்போ, தமிழகத்திற்கு உரிய நிதி பங்கீடோ, பேரிடர் கால பாதிப்பு நிதியோ அல்லது மாநிலத்தின் தொழில், வர்த்தக, வேளாண் வளர்ச்சிக்கோ ஒரு சிறு துரும்பையும் கூட கிள்ளிப் போடவில்லை இந்த பா.ஜ.க.

சென்னை, திருநெல்வேலி, தூத்துக்குடி, விழுப்புரம், திருவண்ணாமலை மற்றும் டெல்டா மாவட்டங்கள் தொடர்ச்சியாக அடுத்தடுத்து வெள்ளப் பெருக்கினாலும், பெரும் புயல்களாலும் தாக்கப்பட்டு, மக்கள் சொல்லொணா துயரங்களை எதிர்கொண்ட போதும் தமிழ்நாடு அரசு கோரிய நிதியை ஒதுக்காமல் தமிழ்நாட்டின் மீது வஞ்சனையோடு செயல்படுகிறது பா.ஜ.க. எனவே, தமிழ்நாட்டு மக்கள் தொடர்ந்து இவர்களைப் புறக்கணித்து வருகின்றனர்.

இந்நிலையில், மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றத்தை மையப்படுத்தி தற்போது தனது அடுத்தகட்ட மதவெறித் திட்டத்தை பாஜகவும், அதன் சங்பரிவார அமைப்புகளும் அரங்கேற்றியுள்ளன. மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் முருகனின் அறுபடை வீடுகளில் ஒன்றாக இருக்கிறது. திருப்பரங்குன்றம் மலைஅடிவாரத்தில் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலும், மலையின் தென்புறம் காசி விஸ்வநாதர் கோவிலும், கீழ்புறம் உச்சிப்பிள்ளையார் கோவிலும் அமைந்துள்ளன.

2000 ஆண்டுகளுக்கு முன்பாக சமணம் இருந்திருக்கிறது. திருப்பரங்குன்றம் மலையின் ஒரு பகுதியில் சிக்கந்தர் பாதுஷா அவுலியா தர்க்கா அமைந்துள்ளது. இங்கு நீண்ட காலமாக மக்கள் எவ்வித பிரச்சனையுமின்றி வழிபாடு செய்து வருகின்றனர்.

நேர்மையும், அறவுணர்வும் கொண்ட நமது முன்னோர்கள் காலத்தில் இருந்தே அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோவிலில் பூசைகளும், சிக்கந்தர் தர்காவில் அவ்வப்போது நேர்த்திக்கடன் செலுத்துவதற்காக ஆடு, கோழிகளை காணிக்கையாக செலுத்தி அன்னதானம் (கந்தூரி) செய்வதும் வழக்கமாக இருந்துள்ளது. இஸ்லாமியர்கள் மட்டுமின்றி இந்துக்களும் தர்க்காவிற்கு சென்று நேர்த்திக்கடன் நிறைவேற்றி வருகின்றனர்.

மேற்கண்ட வழிபாட்டு முறைகள் குறித்து உண்மைக்கு மாறான செய்திகளை பரப்பி மக்கள் மத்தியில் பதற்றத்தை பாஜக மற்றும் ஆர்.எஸ்.எஸ். இந்துத்துவா அமைப்புகள் ஏற்படுத்தி வருகின்றன. திருப்பரங்குன்றத்தில் இருக்கிற சுப்பிரமணியசுவாமி கோவிலுக்கு ஏதோ ஆபத்து ஏற்பட்டுள்ளதாக பொய் செய்திகளைப் பரப்பி பிப்ரவரி 4ம் தேதி திருப்பரங்குன்றத்தில் கூடுமாறு அழைப்பு விடுத்தது. சமூக வலைதளங்களில் மதவெறிப் பிரச்சாரங்களில் ஈடுபட்டது.

இந்நிலையில் திருப்பரங்குன்றத்தில் உள்ள அனைத்து கட்சி தலைவர்களும் ஒன்றிணைந்து பதற்றத்தை உருவாக்க முனைந்துள்ள மதவெறி சக்திகள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சியரிடம் வலியுறுத்தினர். மாவட்ட நிர்வாகமும் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொண்டன.

அதே நேரத்தில் தமிழ்நாட்டு மக்கள் இவ்வமைப்புகளின் பொய்யையும், புரட்டையும் நம்பவில்லை; முற்றிலுமாக புறக்கணித்துள்ளனர். எனினும், அங்கு கூடிய மதவெறி அமைப்பினர் இந்திய அரசமைப்பு சட்டத்திற்கு விரோதமாகவும் வெறியூட்டக்கூடிய விதத்திலும் பேசி தங்களது பிளவுவாதத் திட்டத்தை பகிரங்கமாக அறிவித்துள்ளனர்.

மேலும், தமிழ்நாட்டின் பொது அமைதியையும், ஒற்றுமையையும் உயர்த்திப்பிடித்த திருப்பரங்குன்றம் உள்ளிட்டு மதுரை மக்களுக்கும், மதச்சார்பற்ற அனைத்து அரசியல் கட்சிகளுக்கும், அமைப்புகளுக்கும் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மிகப்பழமையான நகரமான மதுரை எப்போதும் மதநல்லிணக்கத்திற்கு எடுத்துக்காட்டாக திகழ்கிறது. மதுரை மக்கள் அனைத்து மத நம்பிக்கைகளை மதித்தும், அனைத்து மத விழாக்களிலும் பங்கேற்று வருகின்றனர்.

மதவெறி சக்திகளின் சூழ்ச்சிகளை முறியடித்து மக்கள் ஒற்றுமையையும், அனைத்து பகுதி மக்களின் வழிபாட்டு உரிமையையும் பாதுகாக்க திருப்பரங்குன்றத்தின் அனைத்துப் பகுதி மக்களும் இப்போதுபோல் எப்போதும் உறுதிகாட்ட வேண்டும் எனவும், தமிழ்நாடு இத்தகைய மதவெறி அமைப்புகளை முழுமையாக புறக்கணித்திட வேண்டும் எனவும் அன்போடு கேட்டுக் கொள்கிறோம்.

அனைத்து மதச்சார்பற்ற கட்சிகளும் மதச்சார்பின்மை மற்றும் மக்கள் ஒற்றுமை காப்பதில் உறுதியுடன் செயல்பட்டு அனைத்து மக்களின் வழிபாட்டு உரிமையை பாதுகாப்போம் என்று உறுதி கூறுகிறோம்.

# கோபிசந்த் ஹிந்துஜா தொகுத்த “ஐ ஆம்?” புத்தகத்தை வெளியிட்ட இந்தியாவின் குடியரசுத் துணைத் தலைவர் ஸ்ரீ ஜக்தீப் தன்கர்

சென்னை, 10 பிப்ரவரி 2025: சிறப்புமிக்க துணைத் தலைவர் என்கிளேவில் அரசியல் மற்றும் வணிக வர்க்கங்களைச் சேர்ந்த புகழ்பெற்ற தலைவர்கள் குழு மற்றும் சமூக உறுப்பினர்கள் கலந்து கொண்ட ஒரு நேர்த்தியான விழாவில், பிரபல தொழில் அதிபரும் இந்துஜா குழுமத்தின் தலைவருமான திரு. கோபிசந்த் பி. இந்துஜாவின் “ஐ ஆம்?” (நான்) என்ற புத்தகத்தை வெளியிட்டார் இந்தியாவின் மாண்புமிகு துணைத் தலைவர் ஸ்ரீ ஜக்தீப் தன்கர்.

ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றிய இந்திய துணைத் தலைவர் ஸ்ரீ ஜகதீப் தன்கர், “இது உண்மையிலேயே ஒரு தனித்துவமான தருணம். ஸ்ரீ கோபிசந்த் பி. இந்துஜாவின் சிந்தனைமிக்க மற்றும் சிந்தனையைத் தூண்டும் ஒரு தொகுப்பு “ஐ ஆம்?” புத்தக வெளியீடாகும். பழமையான நாகரிகங்களில் ஒன்றின் தொட்டில் மற்றும் உலகளாவிய ஆன்மீக மையமான சனாதன பூமியான பாரதத்தில் நடைபெறும் இந்த வெளியீடு ஆழமான முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது. இந்த புத்தகம் பாரதத்தின் உலகளாவிய பொருத்தத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது, அனைத்து நம்பிக்கைகளிலும் காணக்கூடிய திறமை. ஆவர்ச்சிகரமான மதமாற்றங்கள் இல்லாமல் நாம் மற்றவர்களின் உண்மையை மதிக்கலாம் மற்றும் பாராட்டலாம். ஒற்றுமை என்றால் சீரான தன்மை இல்லை. பாரததா ஒரு சரியான உதாரணம். இது வேற்றுமையில் ஒற்றுமையை எடுத்துக்காட்டுகிறது”.

“எனது கருத்தை நான் உறுதிப்படுத்துகிறேன், ஐக்கிய ராஜ்ஜியத்தின் மன்னர் மூன்றாம் சார்லஸ் இந்த ஆய்வுக் கட்டுரைகளுக்கு அங்கீகாரம் அளித்திருந்தார். நம்பிக்கை மற்றும் சகிப்புத்தன்மை மற்றும் விருப்பத்தின் அமைச்சரான ஷேக் நஹ்யான் பின் முபாரக் அல் நஹ்யான் இதைப் புகழ்ந்துள்ளார்” என்றார்.

இந்துஜா குழும நிறுவனங்கள் (இந்தியா) தலைவர் திரு. அசோக் பி. இந்துஜா தனது தொடக்க உரையில், “பல புவியியல் பகுதிகளில் பல்வேறு கலாச்சாரங்களை வழிநடத்தி, அதன் சனாதன மரபுகளைப் பேணுவது எங்கள் குடும்பத்தின் வாழ்க்கை முறையாக இருந்து வருகிறது. யூன்முக கலாச்சார புரிதலை ஊக்குவிப்பது எங்களுக்கு நம்பிக்கையின் ஒரு பொருளாக இருப்பதால் எங்கள் வணிகங்கள் செழித்துள்ளன. ஒருவரின் ஆன்மீகத்தைக் கண்டறிய மதம் ஒரு படிக்கல்லானால், ‘ஒன்றிணைக்க வேண்டிய ஒன்று’ எவ்வாறு பிரிவினையை உருவாக்குகிறது என்று ஜிபி அடிக்கடி யோசிப்பார். இந்த விஷயத்தில் பல்வேறு ஆன்மீக குருக்கள், அறிவுஜீவிகள் மற்றும் உலகத் தலைவர்களுடன் நடந்த உரையாடல்களால் ஈர்க்கப்பட்டு, இளைய தலைமுறையினருக்கு நேர்மறையாக உதவவும், உலகமயமாக்கப்பட்ட மற்றும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட உலகில் அவர்களை வழிநடத்த செல்வாக்கு செலுத்தவும் இந்த புத்தகத்தை தொகுக்க ஜிபி நிர்பந்திக்கப்பட்டார்.

பர்மார்த் நிகேதன் அறக்கட்டளையின் தலைவர் சுவாமி சித்தானந்த சரஸ்வதி கூறுகையில், “கோபிசந்த் பி. இந்துஜாவின் புத்தகம் உள்ளடக்கமானது ‘நான்’ இலிருந்து ‘நாம்’ வரையிலான பயணத்தைப் பற்றியது, ஏனெனில் அப்போது தான் மனிதகுலம் நோயிலிருந்து நல்வாழ்வை நோக்கி நகர முடியும். இது உலகம் ஒரு குடும்பம் என்ற ரிக் வேதத்தின் - வசுதைவ குடும்பகம் - செய்தியை உள்ளடக்கியது”.

இந்த நிகழ்வில் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜித் தோவல்; பிரபல சட்ட வல்லுநரும் ராஜ்யசபா எம்.பி.யுமான டாக்டர். அபிஷேக் மனு சிங்வி; பிரிட்டிஷ் உயர் ஆணையர் லிண்டி கேமரூன்; எச்டிஎஃப்சி கேபிட்டலின் நிர்வாக இயக்குநர் விபுல் ருங்தா; ஜிண்டால் ஸ்டீல் & பவர் லிமிடெட் தலைவரும் மக்களவை உறுப்பினருமான நவீன் ஜிண்டால் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# இருநூறு இலக்கு! தொடங்கி வைத்த ஈரோடு கிழக்கு!

சென்னை, 10 பிப்ரவரி 2025: தந்தை பெரியார் மண்ணான தமிழ்நாட்டில், அவர் பிறந்த ஈரோட்டின் கிழக்குத் தொகுதியில் நடைபெற்ற இடைத்தேர்தலில், பேரறிஞர் அண்ணாவால் உருவாக்கப்பட்டு, முத்தமிழறிஞர் கலைஞரால் பேணிப் பாதுகாக்கப்பட்டு, அவர்தம் உடன்பிறப்புகளால் வளர்க்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளராகப் போட்டியிட்ட திரு. வி.சி.சந்திரகுமார் அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்திலே வாக்களித்து மகத்தான வெற்றியை மக்கள் வழங்கியிருக்கிறார்கள். இது திராவிட மாடல் ஆட்சிக்கு மக்கள் அளித்திருக்கும் மற்றொரு நற்சான்றிதழ்.

நம் உயிர்நிகர் தலைவர் கலைஞரை இயற்கை நம்மிடம் இருந்து பறித்துக் கொண்டதால், நிரந்தர ஓய்வெடுக்க அலைகள் தாலாட்டும் வங்கக் கடற்கரைக்கு நம் தங்கத் தலைவர் சென்றபிறகு, அவருடைய அன்பு உடன்பிறப்புகளான நீங்கள், கழகத் தலைவர் என்ற பொறுப்பை என் தோளில் சுமத்தினீர்கள்.

கழகத்தைத் தோளிலும், தலைவர் கலைஞரையும் - அவருடைய உடன்பிறப்புகளான உங்களையும் நெஞ்சிலும் சுமந்துகொண்டு தொடர்ந்து பயணிக்கிறேன். இந்தப் பயணத்தில் எதிர்கொண்ட தேர்தல் களங்களில் எல்லாம் வெற்றியன்றி வேறில்லை என்கிற வகையில் தொடர்ச்சியான வெற்றியைத் திராவிட முன்னேற்றக் கழகம் பெற்று வருகிறது. அந்த வரிசையில், ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலிலும் கழக வேட்பாளர் வெற்றி பெறுவார் என்பதில் உங்களைப் போலவே உங்களில் ஒருவனான நானும் உறுதியாக இருந்தேன்.

இடைத்தேர்தல் பணிகளைக் கழக நிர்வாகிகளும், உடன்பிறப்புகளும், தோழமைக் கட்சிப் பிரமுகர்களும் கவனித்துக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையுடன் திராவிட மாடல் அரசின் மக்கள் நலன் சார்ந்த திட்டங்களையும், அவை உரிய முறையில் செயல்படுத்தப்பட வேண்டும் என்பதற்கான ஆய்வுப் பணிகளையும் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறேன். பிப்ரவரி 6, 7 தேதிகளில் அரசுத் திட்டங்களின் ஆய்வுப் பணிகளுக்காகவும், கழக நிர்வாகிகள் - உடன்பிறப்புகளின் செயல்பாடுகளை அறிந்துகொள்ளவும் நெல்லை மாவட்டத்திற்கு உங்களில் ஒருவனான நான் மேற்கொண்ட பயணம் எல்லையில்லா மகிழ்ச்சியை எனக்கு அளித்தது.

ஒவ்வொரு மாவட்டமாக நடைபெறும் ஆய்வுப் பணிகள் மற்றும் கழக நிர்வாகிகளுடனான சந்திப்புக்காக அந்தந்த மாவட்டங்களுக்குச் செல்லும்போது ஒன்றையொன்று விஞ்சி நிற்கும் வகையிலே மக்களின் பேரன்பும், தாய்மார்களின் பாசமும், உடன்பிறப்புகளின் கொள்கை உணர்வும் பொங்கிப் பெருகுவதைக் காண்கிறேன். அதில் நெல்லைப் பயணம் மிகுந்த உற்சாகத்தை எனக்கு அளித்துள்ளது.

வழிநெடுகத் திரண்டிருந்த மக்கள், குறிப்பாகப் பெண்கள் சகோதரப் பாசத்துடன் அன்பைப் பொழிந்து அகம் மகிழச் செய்தனர். கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் மூலம் மாதந்தோறும் சீர் செய்கிற அண்ணனாக, விடியல் பயணம் திட்டத்தின் மூலம் தங்கள் வேலை சார்ந்த பயணத்தை எளிதாக்கிய சகோதரனாக என் மீது அவர்கள் அன்பு காட்டினார்கள். மாணவியர் பலரும் வாழ்த்து முழக்கங்களை எழுப்பியதுடன், செல்ஃபி எடுத்து மகிழ்ந்தனர். திராவிட மாடல் ஆட்சியில் பெண்களுக்கும் மாணவிகளுக்கும் ஏராளமான திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு அவர்களின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாகக் கழக அரசு இருப்பதால், மாணவிகள் பலரும் திட்டங்களின் பெயர்களைச் சொல்லி, “இவையெல்லாம் எங்களுக்கு ரொம்பவும் பலன் தருகிறது” என்று தெரிவித்ததைக் கேட்டதைவிட, உங்களில் ஒருவனான எனக்கு வேறு என்ன பேறு வேண்டும்? “அப்பா.. அப்பா..” என்று மாணவிகள் காட்டிய பாசத்தின்போது, அவர்களுக்கு நான் எவ்வளவு கடமைப்பட்டிருக்கிறேன் என்பதை உணர்ந்து, தமிழ்நாட்டு மக்களின் முன்னேற்றம்தான் கழக ஆட்சியின் ஒரே இலட்சியம் என்ற மன உறுதியையும் பெற்றேன்.

நெல்லை மாவட்டம் கங்கைகொண்டான் சிப்காட் வளாகத்தில் டாடா பவர் குழுமத்தின் சேலார் நிறுவனத்தைத் தொடங்கி வைத்ததன் மூலம், சூரிய ஒளி மின்கல உற்பத்தித் துறையில் தமிழ்நாடு புதிய பாய்ச்சலை மேற்கொள்ளவிருப்பதுடன், நெல்லை சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த ஏறத்தாழ 4000 பேருக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலை வாய்ப்புகள் அமையும் நல்ல சூழலும் உருவாகியுள்ளது. அரசு நலத்திட்ட விழாவில் திருநெல்வேலி மாவட்டத்தில் 1304.66 கோடி ரூபாய் செலவில் முடிவுற்ற 23 பணிகளைத் தொடங்கி வைத்து, 309.05 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 20 புதிய திட்டங்களுக்கும் அடிக்கல் நாட்டி நெல்லை மக்களின் நலன் காப்பதில் திராவிட மாடல் அரசு உறுதியாக இருப்பதைச் சொல்லால் மட்டுமின்றி செயலாலும் மெய்ப்பித்துள்ளேன், உங்களில் ஒருவனான நான்.

மாவட்டக் கழகத்திற்குட்பட்ட அனைத்து நிர்வாகிகள், சார்பு அணிகளைச் சார்ந்தவர்கள், தொகுதிப் பார்வையாளர்கள் என நெல்லை மாவட்ட உடன்பிறப்புகளைச் சந்தித்து அவர்களின் கழகப் பணிகளை ஆய்வு செய்தபோது, ஆட்சியின் அடித்தளமாக இருக்கின்ற கட்சியின் செயல்வீரர்களில் ஆற்றல் மிக்கவர்களை அடையாளம் கண்டுணர்ந்து கொள்ள முடிந்தது. ஆற்றல்மிக்கவர்கள் ஒருங்கிணைந்து தொடர்ந்து செயல்பட்டால் நெல்லை மாவட்டம் என்றும் கழகக் கோட்டையாக இருக்கும் என்பதை அவர்களுக்கு அறிவுறுத்தும் வாய்ப்பும் கிடைத்தது.

நெல்லை மாவட்டச் சுற்றுப்பயணத்தில் தனக்கேயுரிய ஆற்றலுடன் சிறப்பான ஏற்பாடுகளை செய்திருந்தார் மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சரும் கழகத்தின் முதன்மைச் செயலாளருமான கே.என்.நேரு அவர்கள். சொந்த மாவட்டமான திருச்சியாக இருந்தாலும், அவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள எந்த மாவட்டமாக இருந்தாலும் எதையும் நேர் செய்துவிடக்கூடியவர் நேரு என்பதை நெல்லை மாவட்ட விழா மேடையிலேயே தெரிவித்தேன். சட்டப்பேரவைத் தலைவர் அப்பாவு அவர்கள், மாவட்டக் கழகப் பொறுப்பாளர் திரு.டி.பி.எம்.மைதீன்கான் அவர்கள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் நெல்லை மாவட்ட நிகழ்ச்சிகள் சிறப்புடன் நிறைவேற முழு ஒத்துழைப்பை வழங்கியிருந்தனர்.

# திமுக அமைப்பு செயலாளர் ஆர்எஸ் பாரதி செய்தியாளர்கள் சந்திப்பு

சென்னை, 10 பிப்ரவரி 2025: சென்னை அண்ணா அறிவாலயத்தில் திமுக அமைப்பு செயலாளர் ஆர் எஸ் பாரதி செய்தியாளர்கள் சந்திப்பு தெடர்பான பத்திரிகைச் செய்தி :- தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சிக்கின்ற ஒன்றிய அரசு, பட்ஜெட்டிலும் தமிழ்நாட்டிற்கு மிகப்பெரிய துரோகத்தை செய்து இருக்கிறது. இதை பொதுமக்கள் மத்தியில் கொண்டு செல்ல, மும்முனைப் போராட்டம் போல திமுக நடத்தியது.

யுஜிசி வரைவு அறிக்கையில் மாநில அரசுகளின் உரிமையை பறிக்கும் வகையில் ஒன்றிய அரசு திருத்தங்களை செய்துள்ளது. இதனை திமுக தலைவர் அவர்கள் வன்மையாக கண்டித்து கடிதம் எழுதியதோடு நிற்காமல், தமிழ்நாடு மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில், கடந்த, பிப்ரவரி 6ம் தேதி, தலைநகர் டில்லியில் திமுக மாணவரணி சார்பில் ஆர்ப்பாட்டத்தை நடத்த உத்தரவிட்டார். பாஜக அல்லாத மாநிலங்கள் ஆளுகின்ற அனைத்து மக்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் அந்த ஆர்ப்பாட்டம் அமைந்தது. காங்கிரஸ் கட்சியின் தலைவர் ராகுல்காந்தி அவர்கள் பங்கேற்றார். அகிலேஷ்யாதவ் உட்பட இந்தியா கூட்டணியில் இருக்கும் தலைவர்கள் அனைவரும் பங்கேற்ற நிலையில், அந்த ஆர்ப்பாட்டம் வெற்றியாக அமைந்தது. மாநில அதிகாரங்களை ஒன்றன் பின் ஒன்றாக ஒன்றிய அரசு பறிப்பதை எதிர்த்து கண்டன குரலை அனைத்து தரப்பிலும் எழுப்பத் துவங்கி உள்ளனர்.

மீனவர்களுக்கு இலங்கை அரசால் கொடுக்கப்படுகின்ற துன்பங்களை களைவதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பிரதமருக்கு பலமுறை கடிதம் எழுதியும், நிரந்தர தீர்வு கிடைக்காத காரணத்தினால், இந்தியா கூட்டணியில் உள்ள தமிழ்நாடு கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்ற வளாகத்தின் வெளிப்புறத்தில் கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். மூன்றாம் கட்டமாக, நேற்றயை தினம் தமிழ்நாட்டில் இருக்கின்ற 72 கழக மாவட்டங்களிலும் ஒன்றிய அரசு எந்தளவுக்கு தமிழ்நாட்டை வஞ்சிக்கிறது என்பதை வெளிப்படுத்தும் வகையில் திமுக சார்பில் கண்டன பொதுக்கூட்டங்கள் நடைபெற்றது. இந்த கூட்டங்களும் மிகப் பெரிய வெற்றி பெற்றுள்ளது. தமிழ்நாட்டு மக்கள் மத்தியில் ஒன்றிய அரசின் ஓரவஞ்சனையை வெளிப்படும் வகையில் அந்த பொதுக்கூட்டங்கள் எடுத்துக்காட்டாக அமைந்தன. ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்கு இழைக்கும் ஓரவஞ்சனையை, திமுக தலைவர் அவர்கள் ஆவடியில் மிகத் தெளிவாக பேசி இருக்கிறார். மாதவரத்தில் நடந்த கூட்டத்தில் ஒன்றிய அரசுக்கு எதிரான தனது கோபத்தை வெளிப்படுத்தும் வகையில் இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும் பேசி இருக்கிறார்.

எந்த வகையில் தமிழ்நாடு தாழ்ந்து விட்டது. எல்லா வகையிலும் ஒன்றிய அரசுக்கு பொருள் ஈட்டும் தரும் மாநிலமாக தமிழ்நாடு இருக்கிறது. வரிப் பகிர்வில் கூட 6 லட்சத்து 28 ஆயிரம் கோடி ரூபாய் ஒன்றிய அரசுக்கு தமிழ்நாடு சார்பில் வழங்குகிறோம். அதில் 56 ஆயிரம் கோடி ரூபாய் மட்டுமே திருப்பித் தருகிறார்கள். இது எந்த விதத்தில் நியாயம்? உத்தரப்பிரதேசம், பீகார், குஜராத் ஆகிய மாநிலங்களுக்கு மட்டும் அதிக நிதியை ஒதுக்குகின்றனர். ஏன் தமிழ்நாட்டிற்கு மட்டும் இந்த ஓரவஞ்சனை? ஒன்றிய அமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள் நடிக்கிறார். தானும் ஒரு தமிழச்சி எனும் செல்லும் அவர் தமிழ்நாட்டிற்கு செய்தது என்ன? கொடுக்கும் பணத்தை கூட திருப்பித் தருவதற்கு யோக்கியதை இல்லை.

நாடாளுமன்றத்தில் திமுக எம்பிக்கள் கேட்கும் கேள்விக்கு பதில் செல்ல முடியாமல் நிர்மலா சீதாராமன் கேபப்படுகிறார். இதற்கு மேலும் ஒன்றிய அரசு திருந்தாவிட்டால் திமுக உரிய வகையில் பாடம் புகட்டும்.